[1975 நவம்பர் 6

திரு. எ. சுப்பிரமணியம் : இந்த 21 வயதை 18 வயதாகக் குறைப்பது பற்றி இந்த சட்டமன்றத்தினுடைய கருத்தினை அறியும் பொருட்டு இங்கே அதுபற்றி விவாதிப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா? சட்ட மன்ற உறுப்பினர்களின் கருத்தை அறிந்து அதை மத்திய அரசுக்கு அறிவிக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்படிப்பட்ட கருத்துக்களையெல்லாம் அறியவேண்டும் என்பது டெல்லியில் ஆளும் கட்சியாக இருப்பவர்களின் எண்ணமாக இருந்திருக்கவேண்டும். அந்தக் கட்சியைச் சார்ந்த திரு. சுப்பிரமணியம் அவர்களுக்கு அந்த எண்ணம் இருக்கிறது. அந்த எண்ணம் டில்லியில் உள்ளவர்களுக்கு இருந்திருந்தால், எல்லாச் சட்ட மன்றங்களும் அது பற்றி விவாதித்து, கருத்துக்களைத் தெரிவித்ததற்குப் பிறகு இது குறித்து முடிவு எடுத்திருப்பார்கள். ஆனால், அதற்கு முன்பே முடிவு எடுத்துவிட்டார்கள்.

சாத்தப்பாடியில் பிற்பட்டோர் மாணவர் இல்லம்.

* 207. **வினா—திரு. மு. மாரிமுத்து** : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், சாத்தப்பாடியில் ஒரு பிற்பட்டோர் மாணவரில்லம் துவக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சேலம் மாவட்டம், சாத்தப்பாடியில் ஒரு பிற்பட்டோர் மாணவரில்லம் இக்கல்வியாண்டிலேயே துவக்க அரசு ஆணையிட்டுள்ளது.

திரு. மு. மாரிமுத்து : தலைவர் அவர்களே, இப்போது இந்த இல்லம் ஒரு வாடகைக் கட்டிடத்தில் நடக்கின்றது. புதிதாகக் கட்டிடம் கட்டுவதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, வாடகைக் கட்டிடத்திலாவது ஒரு இல்லம் தேவை என்று முதலில் வற்புறுத்தப்பட்டது. இல்லம் வந்ததும் புதிய கட்டிடம் வருமா என்று கேட்கப்படுகிறது.

திரு. தி. பொன்னுமலை : தலைவர் அவர்களே, சாத்தப்பாடிக் கிராமம் பின் தங்கிய மலைப் பகுதி கிராமம். எனவே அந்த கிராமத்திற்கு மாணவர் இல்லம் விரைவாக ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவ்வில்லம் ஜூலை மாதத்தில் ஏற்படுத்தப்பட்டுவிட்டது என்பதை என் பதிலில் சொன்னேன்.

Broadcasting Unit

* 208 Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state :--

(*a*) whether the students of the Tamil Nadu Polytechnic in Madurai have fabricated a broadcasting unit in January 1975; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : *(அ) ஆம்.*

(இ) இறுதி ஆண்டு மின் இயல்துறை மாணவர்கள் 10 கிலோ மீட்டர் சுற்றளவுக்கு ஒலி பரப்பக்கூடிய 10 வாட் ஒலி பரப்பி ஒன்றை சுமார் ரூபாய் 500 செலவில் செய்துள்ளார்கள்.

THIRU B. VENKATASWAMY : May I know from the Hon. Minister whether such broadcasting units (watts transmitter) discovered by these electrical engineering students in the Madurai Polytechnic will be popularised in the entire State?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பல் தொழில் நுட்பப் பள்ளிகளில் பயிலும் எலக்டிரிகல் என்ஜினியரிங் மாணவர்களுக்கு ஒரு பிராஜெக்ட் கொடுக்கப் பட்டது. அதில் ஒன்று தான் ரூ. 500 செலவில் 10 கிலோ மீட்டர் சுற்றளவுக்கு ஒலி பெருக்கக்கூடிய டிரான்ஸ்மிட்டர் ஒன்றை கண்டு பிடித்திருக்கிறார்கள். அதை ஒரு சுற்றடுக்கில் உள்ள மாணவர்களுக்குப் பயன் படக்கூடிய அளவுக்கு செயல்படுத்த வேண்டும் என்பது தான் நோக்கம். அதை ஒரு ஸ்டேஷனை வைக்க முடியாது. அப்படி வைப்பதற்கு இந்திய சர்க்கார் அனுமதி வேண்டும். பெரிய அளவுக்கு ஒரு திட்டம் தீட்டவேண்டு மானால் அதற்கு அதிக செலவாகும். மாணவர்கள் ரூ. 500 செலவில் ஒரு டிரான்ஸ்மிட்டரைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அவர்களின் திறமை பாராட்டப்பட்டுள்ளது.